1996 ஆகஸ்ட் 10] [திருமதி ஏ.எஸ். பொன்னம்மாள்]

இருக்கின்றது. ஆகையினாலே 2 ஏழைகளையும் ஒன்றாக நினைத்து, அவர்களுக்கு அந்தச் சலுகை அளிக்க வேண்டுமென்பது ஒன்று.

இன்னொன்று, அதேபோன்றுதான் வீடுகட்டுவதிலே, மலையிலே மழை பெய்து மலைச்சரிவு ஏற்படுகிறது, கொடைக்கானல், பண்ணைக்காடு போன்ற பகுதிகளிலேயெல்லாம். அவர்கள் கீழே வந்து வத்தலக்குண்டிலே குடியேற வருகிறார்கள். அப்படி வரக்கூடிய அவர்களுக்கு அரசாங்கமே ஹவுசிங் சொசைட்டி மூலமாக நிலத்தை அக்கொயர் பண்ணி வீடுகளைக் கட்டிக்கொடுப்பதற்கான ஒரு முயற்சி எடுத்துக் கொள்ளப்படுமா என்பதைத்தான் நான் அறிய விரும்புகிறேன். அதற்குத் தயவு செய்து பதில் சொல்லுங்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: எந்த அமைச்சர் பதில் சொல்லுவது?

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி: தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அம்மையார் அவர்களுடைய இரண்டு கருத்துக்களும் பதிவு செய்யப்பட்டிருக்கிறது.

(இ) சென்னை, நந்தனம் ஒய்.எம்.சி.ஏ. அருகில் உள்ள கோல்ஃப் விளையாட்டுத் திடலை குத்தகைக்கு விடுதல்

திரு. சி. ஞானசேகரன்: மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, அண்ணா சாலையில் நந்தனம் பகுதியில் ஒய்.எம்.சி.ஏ.விற்கு அடுத்திருக்கிற கோல்ஃப் விளையாட்டுத் திடல் தமிழக அரசுக்குச் சொந்தமான ஒரு இடம். புகழ்மிக்க காஸ்மாபாலிடன் கிளப்புக்கு அரசு கடந்த 60 ஆண்டுக் காலமாக அதை குத்தகைக்கு விட்டிருந்தது. இப்பொழுது அந்த இடத்தை குத்தகைக்குப் பெறுவதற்கு வேறு சிலர் முயற்சி செய்து கொண்டிருப்பதாக பத்திரிகைகளிலே செய்திகள் வந்து கொண்டிருக்கின்றன. ஆகவே, இனி யாருக்கு அது குத்தகைக்கு விடப்படும் என்பதில் அரசு முடிவு எடுத்துவிட்டதா என்பதை மாண்புமிகு முதல்வரவர்கள் இங்கே அறிவிப்பாரா என்று தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி: மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, பத்திரிகையிலே வந்துள்ள செய்திகளை வைத்துக்கொண்டு மாண்புமிகு உறுப்பினர் ஞானசேகரன் அவர்கள்

இந்தக் கேள்வியை--இந்தப் பிரச்சினையை--இங்கு எழுப்பியிருக்கிறார்கள் என்று கருதுகிறேன். காஸ்மாபாலிடன் கிளப் என்பது நீண்ட நெடுங்காலமாக ஒரு பாரம்பரியம் மிக்க நிறுவனமாக இருந்து வருகிறது. இன்னும் சொல்ல வேண்டுமேயானால், நம்முடைய மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களுடைய தந்தையாரை எண்ணினால், அவரிடமிருந்து காஸ்மாபாலிடன் கிளப்பைப் பிரிக்கவே முடியாது. அந்த அளவிற்கு நீதிக்கட்சி காலத்திலேயிருந்து காஸ்மாபாலிடன் கிளப்புக்கு ஒரு பாரம்பரியம் இருந்து வருகின்றது. எந்தப் பாரம்பரியத்தையும் குலைக்கின்ற பண்பாடு இந்த அரசுக்கு இல்லை என்பதை நான் நிச்சயமாகத் தெரிவித்துக் கொள்கின்றேன். அங்கே கோல்ஃப் விளையாடுகின்றவர்கள் அந்த அமைப்பின் சார்பாக இந்த 60 ஆண்டுக் காலக் குத்தகை முடிவுற்றதும் தங்களுக்கு அந்தப் பகுதி வேண்டுமென்று கேட்ட நேரத்தில், அதுபற்றி காஸ்மாபாலிடன் கிளப்புக்கு அரசின் சார்பில், அதிகாரிகளால் ஒரு வினா எழுப்பப்பட்டது. உடனடியாக காஸ்மாபாலிடன் கிளப்பைச் சேர்ந்தவர்கள் என்னைச் சந்தித்து, நம்முடைய வருவாய்த் துறை அமைச்சரை சந்தித்து, அந்த கிளப்புக்கே அந்த இடம் வேண்டும் என்று கேட்டிருக்கின்றார்கள். எனவே, பத்திரிகையிலே வந்துள்ள செய்திகள்--அவர்களுக்கு வந்துள்ள தகவல்கள் தவறானவை பத்திரிகை தவறு என்று சொல்ல மாட்டேன். அவர்களுக்கு வந்துள்ள தகவல்கள் தவறானவை--எனவே காஸ்மாபாலிடன் கிளப்பை விட்டு அந்த இடம் வேறு யாருக்கும் மாற்றப்பட மாட்டாது என்பதைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

திரு. சி. ஞானசேகரன்: மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, மாண்புமிகு பேரவைத் தலைவரவர்கள் பெருமனது வைத்து, சட்டமன்ற உறுப்பினர்களையெல்லாம்கூட அந்த காஸ்மாபாலிடன் கிளப்பிலே உறுப்பினர்களாக, சேர்த்து நல்ல உணவை அளிப்பதற்கு முன் வருவார்களா என்று அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 10-40

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி: தலைவர் அவர்களே, இதற்குத் தாங்கள் பதில் சொல்ல முடியாது இங்கே; அதனால் நான் சொல்கின்றேன். காஸ்மாபாலிடன் கிளப்புக்கு என்று சில விதிமுறைகள் எல்லாம் இருக்கின்றன. சேருவதற்கும் விதிமுறைகள்

1996 ஆகஸ்ட் 10] [கலைஞர் மு. கருணாநிதி]

இருக்கின்றன. சேர்ந்த பிறகும் கடைப்பிடிக்கப்பட வேண்டிய விதிமுறைகள் நிரம்ப இருக்கின்றன. *(சிரிப்பு)*

நான் முதலிலேயே சொன்னதை மீண்டும் நினைவுபடுத்தி காஸ்மாபாலிடன் கிளப்புக்குத்தான் அந்த நிலம் மீண்டும் குத்தகைக்குத் தரப்படும் என்று சொல்வதோடு, கோல்ஃப் விளையாட்டு--நாம் விளையாட்டுத் துறையை ஊக்குவிக்க வேண்டும் என்கிற எண்ணத்தோடு, இந்த அரசு இப்போது அங்கே இருக்கின்ற அந்த கோல்ஃப் விளையாட்டு--அமைப்புக்கு, அந்தச் சங்கத்திற்கு இடையூறு ஏற்படாமல் அவர்களோடு காஸ்மாபாலிடன் கிளப்பிலுள்ளவர்கள் ஒத்துழைக்க வேண்டுமென்ற கோரிக்கையையும் இந்த அவையிலே நான் வைத்து, என்னுடைய கருத்து விளக்கத்தை நிறைவு செய்கிறேன்.

(அ) உறுப்பினர்கள் கொடுத்துள்ள அறிவிக்கைகள் குறித்து--தொடர்ச்சி

திரு. பி.ஆர். சுந்தரம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நேற்று தங்களிடம் நான் ஒரு ஒத்திவைப்புத் தீர்மானம் கொடுத்திருந்தேன். அதை தாங்கள் ஒத்திவைப்புத் தீர்மானமாக எடுத்துக்கொள்ள முடியாது, கவன ஈர்ப்பாக வேண்டுமானால் எடுத்துக் கொள்கிறேன் என்று கூறியிருக்கிறீர்கள். அதிலே நான் கேட்டிருக்கிறேன். சேலம் மாவட்டத்திலே ஆத்தூரிலே அனைத்திந்திய.....

மாண்புமிகு பேரவைத் தலைவர்: கொஞ்சம் இருங்கள். ரொம்ப அமைதியாகப் பேசுகிறீர்கள். நானும் அமைதியாகப் பதில் சொல்கிறேன். ஒத்திவைப்புத் தீர்மானமாக எடுத்துக் கொள்ள முடியாது, கவன ஈர்ப்பாக எடுக்கிறேன் என்று சொன்னேன். கவன ஈர்ப்புக்கு 7 நாட்கள் கால அவகாசம் உண்டு. அந்த கால அவகாசத்தில் வரவில்லையென்றால் கேளுங்கள்.

திரு. பி. ஆர். சுந்தரம்: நான் சிறப்புக் கவன ஈர்ப்பாகக் கொடுத்திருந்தேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நீங்கள் கொடுத்தது சரி. நான் உங்களிடம் சொன்னது கவன ஈர்ப்பு.